ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1970/8 - 2016 ජුනි මස 07 වැනි අඟහරුවාදා - 2016.06.07

*1970/8 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (இ. ச. வா. 423 ஆம் அத்தியாயம்)**

**வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டம்**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 ஆம் மற்றும் 48 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் விதத்தில் குறிப்பிட்ட சட்டத்தின் 5 மற்றும் 7 ஆம் பிரிவுகளின் நியதிகளில், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றிற்கு இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரிடமிருந்து கடன்படுவதற்கு, பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டத்தின் கீழ் அனுமதி வழங்கப்படுகிறது.

(1) இவ்வனுமதியானது, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், உரிமம் பெற்ற குத்தகைக்கு விடும் கம்பனிகள், உத்தரவாதங்களினால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் மற்றும் கரைகடந்த கம்பனிகள் தவிர்ந்த அனைத்துக் கம்பனிகளுக்கும் ஏற்புடைத்தானதாகும்.

(2) கடன்பாட்டாளர் அதே நாணயத்தில் வெளிநாட்டுச் செலாவணி ஈட்டத்தினைக் கொண்டிருக்கின்றார் என்பதை நிரூபித்தாலொழிய அவர் இலங்கையிலுள்ள ஏதேனுமொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியுடன் பொருத்தமான காப்பீட்டுச் சாதனங்களினூடாக செலாவணி இடர்நேர்வுத் தணிப்பினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) கடன்களின் காலம் குறைந்த பட்சம் 3 ஆண்டுகளாக இருத்தல் வேண்டும்.

(4) உயர்ந்தபட்சக் கடன்பாட்டுத் தொகை கம்பனியில் நிதியியல் ஆற்றலினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். கடன்களின் மீள்கொடுப்பனவு மிக அண்மைய குறைந்த பட்சம் மூன்றாண்டு காலத்திற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களையும் வியாபாரத் திட்டத்தினையும் அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) வட்டி வீதம் இலங்கையில் நிலவுகின்ற சந்தை வீதங்களுடன் ஒப்பிடுகையில் போட்டித்தன்மை கொண்டதாகவும் சாதகமானதாகவும் இருத்தல் வேண்டும்.

(6) கடன்பாட்டின் அனைத்து பெறுகைகளும் மீள்கொடுப்பனவுகளும் இலங்கையிலுள்ள ஏதேனுமொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியில் ஏதேனுமொரு குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் கடன்பாட்டாளரினால் பேணப்படும் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கொன்றினூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

ரி. எம். ஜே. வை. பி. பர்னாந்து,
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
2016 யூன் 07.

6- 293



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.